# தமிழ்முரசு

மூன்ருவது புத்தகம்

7 AUG 1946

பதிப்பாசிரியர் :

ம. பொ. சிவஞான கிராமணியார்

O,6x
NU63

**விலை நான்கணு**

வெளி நாடு ஐந்தணு

233, லிங்கி செட்டி தெரு,

சென்னை — 1.

1946-ம் வருடம் ஜூலை மாதம்
உரிமை பதிவு செய்யப்பட்டது.

# பொருளடக்கம்

O-, 6x
N46.3


| | | பக்கம் |
|---|---|---|
| தமிழர்களே ! | .... | 3 |
| போர் துவங்கி விட்டது! | .... ம. பொ. சி. | 5 |
| வீரத் தாய் | .... ஞானம் | 12 |
| குதிரை வீரன் | .... ரா. பி. சேதுப் பிள்ளை | 17 |
| எண்ணிப் பாருங்கள் ! | .... மு. வரதராசனர் | 20 |
| தலை விதி ! | .... கொ. மொ. ஜனர்த்தனம் | 24 |
| மணிமேகலை | .... தெ. பொ. மீ. | 29 |
| சோறு போடும் சாமி | .... பொ. குருசாமி | 40 |
| படைதிரண்டு வாரீர் ! | .... குயிலன் | 45 |
| வீட்டுப் பஞ்சம் | .... பாமரன் | 46 |


TAMIL NADU ARCHIVES LIBRARY
EGMORE, MADRAS-600 008
102044

## தமிழர்களே!

வணக்கம். "தமிழ் முரசு" மூன்றும் புத்தகம் இதோ உங்கள் கையிலிருக்கிறது. இந்தப் புத்தகமும் இதற்கு முன் வெளிவந்த இரு புத்தகங்களும் தமிழினத்தின் முன்னேற்றத்திற்கு எவ்வளவு தூரம் பயன் பட்டன என்பதைத் தமிழர்களின் முடிவிற்கே விட்டுவிடுகின்றேன்.

பதிப்புரை என்ற பழக்கத்தை யொட்டி பக்கங்களை வீணாக்க நான் விரும்பவில்லை. ஆகவே முதலிரண்டு புத்தகங்களுக்குப் பதிப்புரை எழுதாது விடுத்தேன். இம்மூன்றும் புத்தகத்திலும் "தமிழ் முரசு"க்குப் பாராட்டுக் கடிதங்கள் எழுதியவர்களுக்கும், கட்டுரை, கதை ஆகியவைகளைக் கொடுத்து ஆதரிக்கும் எழுத்தாளர்களுக்கும் நன்றி கூறவே இதை எழுதுகின்றேன்.

இதுவரை "தமிழ் முரசு" புத்தகங்களுக்கு கட்டுரைகள், கதைகள், கவிதைகள் தந்துவிய பெரியார்களுக்கு எனது மனமார்ந்த நன்றி உரித்தாகுக. இந்த அறிஞர்கள் இதுவரை எழுதி வந்தது போலவே இனியும் எழுத இசைந்துள்ளார்கள் என்பதையும் வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், தமிழர்கள் வசிக்கும் பிற நாடுகளிலிருந்தும் புகழ் வாய்ந்த அரசியல் தலைவர்களும், தமிழ் மொழி அறிஞர்களும், இன எழுச்சி கொண்ட இளைஞர்களும் எழுதிய வாழ்த்துக் கடிதங்கள் எண்ணிலடங்கா. அவர்களது வாழ்த்தொலி முரசொலியையும் மிஞ்சி நிற்கிறதென்றால் மிகையன்று. அவர்கள் அனைவருக்கும் கூட எனது

நன்றியுடன் கூடிய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே அறிவித்தது போல் எந்தவிதமான அரசியல் கட்சி, சாதி, சமய கொள்கைகளைத் தாங்குவதோ அல்லது தாக்குவதோ என் கொள்கையல்ல. தமிழ் மொழி வளர, தமிழினம் வாழ, தமிழ் நாடு செழிக்க தமிழினத்தார் அனைவரையும் ஒன்று சேர்ப்பதே எனது நோக்கம். தமிழ் நாட்டில் ஏகாதிபத்தியத்திற்கு இடமின்றி, முதலாளித்துவத்தின் சுரண்டலுக்கு முடிவுகட்டி தமிழர் எல்லோரும் ஓர் நிறை என்ற நிலையில் தமிழினம் வாழ வேண்டுமென்பதே என் அவா.

பல நூலாசிரியர்களும், பதிப்பகங்களும் தங்கள் புத்தகங்களை யனுப்பி மதிப்புரை எழுதுமாறு கேட்கின்றனர். "தமிழ் முரசு" புத்தக வெளியீடே யொழிய பத்திரிகையல்ல. ஆகவே, அதில் மதிப்புரை எழுத அரசியலாரின் ஆணை இடந்தராமைக்கு வருந்துகிறேன். பொதுவாக தமிழ் மக்கள் அனைவரையும் வேண்டுவது என்னவென்றால், "தமிழ் முரசு" எனது தனியுடைமையல்ல; தமிழினத்தின் பொதுவுடைமை. அதை எனது வாழ்க்கைக்குப் பொருள் தேடப் பயன்படுத்தாமல் தமிழினத்திற்குப் புகழ் தேடப் பயன்படுத்தவே விரும்புகிறேன். ஆகையினால் தமிழ் மக்கள் இதுவரை ஆதரித்தது போல் இனியும் ஆதரிப்பார்களாக !

வாழ்க தமிழினம்! வாழ்க தமிழகம்!!

—பதிப்பாசிரியர்

# போர் துவங்கி விட்டது!

ம. பொ. சிவஞான கிராமணி

தமிழ் மக்களே, போர் துவங்கிவிட்டது! தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர்களின் நிற வெறியை எதிர்த்து லட்சக் கணக்கான தமிழ் மக்கள் போர் புரிகின்றனர். சிங்களத் தீவில், உழைப்பாளி மக்களான தமிழர்களுக்கு உரிமை தர மறுக்கும் இலங்கை அரசாட்சியை எதிர்த்து அங்குள்ள பதினாயிரக் கணக்கான தமிழ் மக்கள் போர் புரிகின்றனர். தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையிலும், பக்கிங்ஹாம், கர்னாடிக் மில்லில் வேலை செய்யும் தொழிலாளர்களைத் தடி கொண்டு தாக்கிய பஞ்சாபியர்களைத் தாங்கி நிற்கும் வெள்ளை முதலாளியை எதிர்த்து பதினையாயிரம் தமிழ்த் தொழிலாளர்கள் போர் புரிகின்றனர். சென்னை ஸ்பென்ஸர் கம்பெனி தொழிலாளர்கள் தமிழ்ப் புத்தாண்டு விழாவுக்கு விடுமுறை தர மறுத்த ஆங்கில முதலாளியை எதிர்த்துப் போர் புரிகின்றனர்.

நமது தமிழ் மக்கள் நடத்தும் போர் ஆயுதப் போரல்ல; அறப் போர். தாக்குதல் போரல்ல, தற்காப்புப் போர். ஆகவே, அவர்களுக்கு வெற்றி கிடைக்கட்டும்.

தமிழன் உறங்கிக் கிடந்த காலம் ஓடி மறைந்து விட்டது. தமிழ் நாட்டிலும் சரி, தமிழ் நாட்டிற்கு வெளியே தமிழர் வாழும் இடங்களிலும் சரி, தமிழர் என்ற இன உணர்ச்சி பொங்கி எழுந்துவிட்டது. "தமிழ் வாழ்க! தமிழினம் வாழ்க!! தமிழ் நாடு வாழ்க!!!" என்ற வாழ்த் தொலி வானத்தை முட்டுகின்றது. பொங்கல் விழா, புத்தாண்டு விழா, புலவர் விழா ஆகிய விழாக்கள் எங்கும்

கொண்டாடப்படுகின்றன. ஆண்டு முழுவதும் விழா நாட்களைத் தவிர வேறு நாட்கள் இல்லை என்ற நிலைக்கும் வந்து விடலாம் போல் தோன்றுகிறது. பாரதியார், வ. உ. சிதம்பரனார் போன்ற மறைந்துவிட்ட வீரர்களுக்கு மண்டபங்கள் எழுப்பப்படுகின்றன. இதெல்லாம் தமிழரின் கலையுணர்ச்சியையும், இன உணர்ச்சியையுமே காட்டுகின்றன.

ஆனால், தமிழ் இனத்தவர் தன்மானத்துடன் வாழ இது மட்டும் போதாது. தமிழ் நாட்டின் வளத்தைச் சுரண்டும், தமிழ் மக்களின் வாழ்வைப் பறிக்கும் தீய சக்திகளை எதிர்த்துப் போர் புரிந்தே தீர வேண்டும். அந்தப் போர் இதோ துவங்கி விட்டது. பாட்டாளித் தமிழர் படை திரண்டு விட்டனர்.

## தென் ஆப்பிரிக்கா

தென்னாப்பிரிக்காவில் வாழும் இந்தியர்களில் மிகப் பெரும்பாலோர் தமிழர்களாவர். பரதேசி என்று வந்தோர் யாரானாலும் பரிவுடனே வரவேற்றுப் பங்கும் தந்த பழந்தமிழ் மரபைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்குத் தமிழகத்தில் வாழ இடமுண்டு; ஆளும் உரிமையும் உண்டு. ஆயினும் அவர்கள் தாய் நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றது. அடிமைப்பட்ட தமிழகத்தில் வளம் குறைந்தது; வறுமை மிகுந்தது. ஆகவே அவர்கள் தாய் நாடான தமிழ் நாட்டை விட்டு அண்டை நாடாம் ஆப்பிரிக்கா சென்றனர். தமிழர்களின் உழைப்பால் தென்னாப்பிரிக்காவில் காடெல்லாம் நாடானது. வறண்டு கிடந்த நாடு வளத்தில் சிறந்து நின்றது.

தமிழர்களைப் போலவே வெள்ளையர்களும் அந்நாட்டில் குடி புகுந்தவர்களேயாவர். ஆனால் தமிழரைப் போன்று அன்னார் உழைத்துப் பிழைக்கவில்லை. தமிழரது உழைப்பால் மிகுந்த செல்வத்தைக் கொள்ளையிட்டுக் கொழுக்கலாயினர். அத்துடன் நில்லாது ஆப்பிரிக்காவில் அண்ட வந்த அவர்கள் அரசுரிமையும் அடைந்தனர். இதுதான் தென்னாப்பிரிக்காவிலுள்ள தமிழர்களுடையவும், வெள்ளையர்களுடையவும் ஆதிவரலாறு.

இன்றைய நிலைமை என்ன? அண்ட வந்த ஐரோப்பியர் தமிழரை அடக்கியாள முயலுகின்றனர். அன்று தமிழ் மகனை பாலசுந்தரத்தைப் பல்லுடைத்தது முதல் இன்று கிருஷ்ணசாமியைக் குத்திக் கொன்றது வரை வெள்ளையர்கள் தமிழர்களுக்கிழைத்த கொடுமையைச் சொல்லி முடியாது.

ஆனால், காலம் மாறிவிட்டது. தமிழ் மக்கள் வெள்ளையர்களின் நிறத் திமிரை எதிர்த்துப் போர் துவங்கிவிட்டனர். தாங்கள் மட்டும் தனித்து நின்று போராடாது, தங்களைப் போன்று வெள்ளையர்களின் கொடுமைக்கு ஆளான ஏனைய இந்திய இனங்களுடன் இணைந்தே போராடுகின்றனர். கொள்ளையிட வந்த வெள்ளையர்களுக்குள்ள உரிமைகள் அனைத்தும், ஆப்பிரிக்காவின் வளத்திற்கு உழைத்து, அந்நாட்டுச் சுதேசிகளுடன் உறவுகொண்டு வாழும் தங்களுக்கும் உண்டு என்று உரிமைப் போர் செய்கின்றனர். "ஒன்று, சேரியில் வாழுங்கள்; அல்லது சிறையில் வாழுங்கள்" என்று அகம்பாவத்துடன் ஆணையிட்டான் ஜெனரல் ஸ்மட்ஸ். ஆனால், அங்குள்ள இந்தியர்கள், குறிப்பாக வீரத் தமிழர்கள் சேரி வாழ்வை ஏற்க

மறுத்து, டாக்டர் மோகாம்பரம் தலைமையில் இருட் சிறைக்கு ஏகிவருகின்றனர். வளர்க அவர்களது போராட்டம்! வெல்க அவர்களது வீரம்!

## சிங்களத் தீவு

இலங்கையிலும் அரசாங்கத்தை எதிர்த்துத் தமிழர்கள் போர் புரிகின்றனர். இலங்கையின் வளத்துக்குப் பன்னெடுங் காலமாகப் பாடுபட்ட தமிழ் மக்கள் பதினாயிரக் கணக்காக அங்கே பட்டினியால் வாடுகின்றனர். தமிழர்களின் உழைப்பைப் பெற்ற அரசாங்கம் அவர்களுக்கு உரிமையைத் தர மறுக்கிறது. அது மட்டுமல்ல; அவர்களை இலங்கையை விட்டு வெளியேற்றவும் முயல்கிறது. அங்கேயும் ஆண்ட வந்த ஐரோப்பியன் அரசு புரிகின்றான். அவனுக்கு அடங்கி வாழுகின்றனர் சிங்களவர். ஆனால், அதே சிங்களவர் தங்கள் உழைப்பைக் கொடுத்து அவர்களுடன் உறவு கொண்டு இலங்கையையே தாய் நாடாக எண்ணி வாழும் தமிழர்களுக்கு உழைப்புக் கேற்ற ஊதியத்தையும், ஓட்டுரிமை உள்பட வாழ்க்கைக்குரிய பிற உரிமைகளையும் தர மறுக்கின்றனர். இந்த நன்றிகெட்ட செய்கையை என்னென்பது?

இலங்கையில் தமிழன் மூளை உழைக்கிறது. ஐரோப்பியன் மூலதனம் கொழுக்கிறது. ஐரோப்பியரின் பார்வையிலே சிங்களவரும் அடிமை; தமிழரும் அடிமை. இந்த அடிமைகளுக்குள்ளே தான் போராட்டம். ஆளும் வர்க்கம் இதைப் பார்த்து ஆனந்தப்படுகிறது. இந்த உண்மையைச் சிங்களவர் அறிந்து கொள்ளும் நாள் என்நாளோ?

இலங்கையிலுள்ள தமிழர்கள் தங்கள் வாழ்க்கை உரிமைக்குப் போராடுகின்றார்களே யொழிய, சிங்களவரின் வாழ்வைப் பறிக்க அல்ல. அன்று இலங்கையை ஆண்ட கயவாகு மன்னன் தமிழ் நாட்டுக் கண்ணகியின் வீரச் செயலுக்கு விபந்து முடிதாழ்த்தி அடி வணங்கினன். அவன் நாட்டு மக்களாகிய சிங்களத் தலைவர்களும் தமிழ் மக்களின் அறப் போருக்கு பணிந்து கொடுக்கும் நாள் வெகு தூரத்திலில்லை என்பது திண்ணம்.

## சென்னை நகர்

வெளி நாடுகளில் தமிழ் நாட்டுப் பாட்டாளி மக்கள் படும் வேதனையைப் பார்த்தோம். இனி, தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையைக் கவனிப்போம். பக்கிங்ஹாம், கர்ணடிக் மில்களில் வேலை செய்யும் 15,000 தொழிலாளர்கள் இன்று வேலை நிறுத்தம் செய்துள்ளனர். இதன் விளைவாக சுமார் 70,000 தமிழ் மக்கள் பட்டினியால் பரதவிக்கின்றனர். இந்நிலை ஏற்படக் காரணம் என்ன?

இந்த மில்களை நிர்வகிப்பவன் வெள்ளை முதலாளி. 15,000 தொழிலாளிகளும் தமிழ் மக்கள். இங்கும் உழைப்பவர் தமிழர். கொழுப்பவன் ஆங்கிலேயன். கொழுப்பவன் சார்பாக உழைப்பவரைக் கண்காணிப்பவர் ஐம்பத்தி மூன்று பஞ்சாபியர். வெள்ளையனின் மூலதனத்துக்கும் பஞ்சாபியரின் முரட்டுத் தனத்துக்கும் தமிழ்த் தொழிலாளிகள் அடங்கிவாழ வேண்டுமாம். ஒருவர் இருவரல்ல; 15,000 தமிழர்கள். தமிழ் நாட்டில் தமிழர் மத்தியில் தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அவமான நிலை இது. இந்த அவமான நிலையை எதிர்த்துத் தன்மானப் போர்புரியும் தமிழர்களைத் தலை வணங்கிப் போற்றுகிறேன்.

இந்தியாவின் ஒரு கோடியிலுள்ள தமிழர்களுக்கும் மற்றொரு கோடியிலுள்ள பஞ்சாபியர்களுக்கும் வேற்றுமை காட்ட முடியாதென்று வீம்பு பேசுகிறார் மில் நிர்வாகியான டவுன் துரை. மாகாண வேற்றுமை காட்டும்படி டவுன்

துரையிடம் எந்தத் தமிழனும் மண்டியிட்டுக் கெஞ்சவில்லை. ஆனால் ஒரு மாகாணத்தினரைக் காவல் காக்க வேண்டு மென்றே இன்னொரு மாகாணத்தவரைப் பயன் படுத்த வேண்டாம் என்று தான் தமிழ்த் தொழிலாளர்கள் கேட் கின்றனர்.

இன்று எந்தப் பஞ்சாபியருக்காக டவுன் துரை பரிந்து பேசுகிறாரோ அதே பஞ்சாபியரின் இனத்தை டவுன் துரையின் வர்க்கத்தைச் சேர்ந்த டயர் துரை ஜாலி யன்வாலா பார்க்கில் சுட்டுக் கொன்ற போது இறந்த அந்த வீரர்களுக்கு அனுதாபம் காட்டி அந்த நாளைத் திரு நாளாகவும் கொண்டாடுகின்றனர் தமிழர்.

ஆகவே, இன்று 15,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளது 53 பஞ்சாபியர்களை எதிர்த்தல்ல. அவர்களைத் தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தும் வெள்ளை முதலாளிகளை எதிர்த்தேயாகும்.

சென்னை நகரில் இன்னொரு போராட்டம். வெள்ளை யரால் நடத்தப்படுவது ஸ்பென்ஸர் கம்பெனி அதிலே வேலை செய்யும் நூற்றுக்கணக்கான தொழிலாளிகள் தமிழ ராவர். அவர்கள் இவ்வாண்டு சித்திரைத் திங்கள் முதல் நாளன்று புத்தாண்டு விழாவுக்கு விடுமுறை வேண்டினர். தமிழ் இனத்தின் பண்பாட்டை அறியாத முதலாளி அனுமதி மறுத்தார். “பறையருக்கேது தைப் பூசம்?” என்று நந்தனைப் பார்த்து அன்று அந்தணர் கூறினர். அதே போல் இன்று ஸ்பென்ஸர் கம்பெனி முதலாளியும், “அடிமைகளுக்கேது ஆண்டு விழா” என்று எண்ணினர் போலும்! எனினும், தொழிலாளர்கள் தங்கள் இன உரிமை யைப் பெற்றே தீருவதென உறுதி கொண்டனர். இதன் விளைவுதான் ஸ்பென்ஸர் வேலை நிறுத்தம்.

பக்கிங்ஹாம், கர்னடிக் மில்கள், ஸ்பென்ஸர் கம்பெனி ஆகியவைகளில் வெள்ளை முதலாளிகளுக்கும் தமிழ்த் தொழி லாளிகளுக்கும் நிகழ்ந்து வரும் போராட்டத்தின் அன்றாட நிகழ்ச்சிகள் தமிழ் இனத்துக்கே ஆத்திரமூட்டுபவையாக

இருக்கின்றன. தமிழினத்தின் தன்மானத்தைக் காப்பாற்றப் போரிடும் தமிழர்களைச் சிறையில் தள்ளுவதும், அங்கு கல்லுடைக்க வைப்பதும் தமிழரின் ஆண்மைக்கு அறைகூவலாகும். இவ்வளவும் தமிழ் நாட்டில் தமிழர் மத்தியில்தான் நடக்கிறது. தமிழ் நாட்டு அறிவாளிகளும், அமைச்சர்களும், அரசியல் தலைவர்களும் இதை அறிந்தும் அறியாதது போல் அமைதியாக வாழ்கின்றனர்.

தமிழினத்திற்கு ஒரு வேண்டுகோள். தமிழ் மக்கள், ஆப்பிரிக்கா நாட்டில் அல்லல் படுவதும், சிங்களத் தீவில் சீரழிவதும், சென்னை நகரில் சிறை பிடிக்கப்படுவதும் தமிழினத்தின் தன்மானத்திற்கே அறை கூவலாகும். இந்த அறை கூவலானது சிங்களத் தீவில் மறை முகமாகவும், மற்ற விடங்களில் நேர் முகமாகவும் ஆளும் வர்க்கமாகிய ஐரோப்பியர்களிடமிருந்தே வந்துள்ளது.

தமிழினத்தின் முன்னேற்றத்திற்குப் பாடு படுவதென்றால் படிப்பாலும் பணத்தாலும் ஏற்கனவே முன்னேறி விட்ட தமிழர்களுக்கு மேலும் மேலும் பணமும் பதவியும் தேடித்தருவதல்ல. தமிழினத்தில் ஒடுக்கப்பட்ட மக்களை உயர் நிலைக்குக் கொண்டு வருவதேயாகும்.

ஒடுக்கப்பட்ட தமிழரின் குரல், தென்னாப்பிரிக்காவிலும், சிங்களத்தீவிலும், சென்னை நகரிலும் கேட்கிறது. உதவிக்கு விரைந்து வாருங்கள். தென்னாப்பிரிக்கா வெள்ளையரின் நிற வேற்றுமையையும், இலங்கை அரசாங்கத்தாரின் நீதியற்ற செயலையும், பஞ்சாபியரைக் கொண்டு தமிழரைத் தாக்கும் சென்னை வெள்ளை முதலாளிகளின் பிரித்தாளும் தந்திரத்தையும், எதிர்த்துப் போரிடும் எல்லா வீரத் தமிழர்களுக்கும் வெற்றி கிட்டுவதாக.

வெற்றி எட்டுத் திக்கு மெட்டக் கொட்டு முரசே!
வீரர் என்றும் வாழ்கவென்று கொட்டு முரசே!

---

# வீரத் தாய்

ஞானம்

பாண்டி நாடு வீரத்திற்குப் பெயர் பெற்றது. அந் நாட்டுக் குடிமக்கள் பகை பயமின்றி வாழ்ந்து வந்தனர். ஆனல் பகையறியாப் பாண்டி நாட்டில் ஒரு நாள் பகை தோன்றிவிட்டது மாற்ருனின் படைகள் பாண்டியநாட்டுத் தலைநகரின் மதிற்புறத்தை முற்றுகையிட்டன. பகை மன்ன னின் போர்ப் பறை கேட்டு "வந்தது போர்" என்று வீர மறவர் தோள் தட்டி ஆரவாரித்தனர். பாண்டி நாட்டு குடி மக்களோ அறநெறி பிசகாது ஆட்சி புரியும் தங்கள் அரச னுக்குற்ற பகையை அழிக்கப் படை திரண்டு வந்தனர்.

போர் பல நாட்கள் நடந்தது. எனினும் முடிவு பெற வில்லை. வழக்கம் போல் ஒரு நாள் அதிகாலை மாற்ருனின் பறையொலி கேட்டது. அன்றையப் போருக்கு வீட்டுக் கொரு ஆள் வெளிப்பட வேண்டுமென அரசரின் ஆணையும் வீதி தோறும் அறிவிக்கப்பட்டது.

மறவர் குடியைச் சேர்ந்த பெண்ணொருத்தி, மாற்ரு னின் பறையோசையையும், மன்னனின் ஆணையையும் காதில் கேட்டாள். அவளது தந்தை முந்தா நாள் போரில் யானையுடன் போர் புரிந்து அதனுல் கொல்லப்பட்டான். நேற்றைய போரில் அவளது கணவன் மாற்ருனின் படை களின் அணிவகுப்பைப் பிளந்து கடும்போர் புரிந்தபோது கொல்லப்பட்டான். இன்றும் பகைவனின் பறையோசை அவளது உள்ளத்தை உறுத்திற்று. அரசனது ஆணையோ அவளது கடமையை உணர்த்திற்று.

அவள் குடும்பத்தில் அவளது ஒரே புதல்வனைத் தவிர வேறு ஆண் மகனில்லை. அவனும் என்றுமே போர் முனையைக் கண்டறியாத இளம் பாலகன். என் செய்வாள்? மாற்றானின் போர் முரசோ மறவர் குலத்தின் மானத்தை அறை கூவுகின்றது. அந்த அறை கூவலைக் கேட்டு அவள் ஆத்திரங் கொண்டாள்.

இந்நிலையில், தோழர்களுடன் வெளியே சென்றிருந்த அவளது மகன் இல்லம் திரும்பினான். அவன் தன் தாயின் கோபத்தால் சிவந்த கண்களிலிருந்து சிந்தும் நீர்த் துளிகளைக் கண்டு திடுக்கிட்டான். தன்னை ஈன்றாளின் துயருக்குக் காரணம் இன்னதென அறிய அவன் விரும்பினான்.

மகன் :—அன்னையே! வேல் வரினும் கண்ணிமைக்காத வீர மறவர் குலத்தைச் சேர்ந்த தாங்கள், கண்ணீர் சிந்தக் காரணம் என்ன?

தாய் :—ஆ, என் வீரச் சிங்கமே! என் துயரைத் தீர்க்க இளம்பிள்ளையாகிய நீ வல்லவனோ!

மகன் :—ஈன்றெடுத்த தாயே! உமது மனத்துயருக்குள்ள காரணம் எத்தகையாயினும் அதைப் போக்க இப்போதே, இக்கணமே தயார். அஞ்சாமல் சொல்லும்.

தாய் :—மகனே! பாண்டிய நாட்டைப் பகைவன் முற்றுகையிட்டு பல நாட்களாகின்றன. கூற்றுவனுக்கு உயிர் கோடி கொடுத்தாயிற்று. இன்னமும் பகைவனை முறியடித்த பாடில்லை. முந்தா நாள் போரில் உன் பாட்டனும், நேற்றைய போரில் உன் தந்தையும் வீரப் போர் புரிந்து விண்ணுலகெய்தினர். இன்றும் மாற்றானின் போர்

முரசு மறவர் நாட்டில் ஒலிக்கக் கேட்கிறேன். இன்றைய போருக்கு வீட்டுக்கொரு ஆள் வேண்டுமென்று மன்னனது ஆணையும் வீதியில் அறிவிக்கக் கேட்டேன். ஆ, என் செல்வமே! நான் என் செய்வேன்? போருக்கனுப்பும் பருவமுடைய ஆண் மகன் நமது இல்லத்திருப்பின் அனுப்பி மகிழ்வேன். அஃதின்மையால் வருந்துகின்றேன்.

மகன்:—அன்னையே! நீ பாக்கியசாலி. இதோ, உன் வீரப் புதல்வன் இருக்கின்றேன். மாற்றானின் அறை கூவலை யேற்று, மன்னனின் ஆணையை மதித்து, இப்போதே போர்க்களம் புகுவேன்.

தாய்:—அச்சமறியாத என் ஆண் சிங்கமே! உன் வீரத்தைக் கண்டு மகிழ்கின்றேன். ஆயினும் நீயோ சிறு பிள்ளை. மாற்றானின் படை பலம் எங்கே, நீ எங்கே! வேலொழுகும் போர்க்களத்தில் பாலொழுகும் பாலகனாகிய நீ போராட வல்லவனோ.

மகன்:—தாயே! நன்று, நன்று; நின் வார்த்தை. வீரத்திற்கு வயது கணக்குண்டோ? அடிமைத்தனம் இன்னதென்று அறியாத பாண்டிய நாட்டு மக்களை அடிமைப்படுத்த முயல்பவரை அழிக்காமல் விடுவதோ! பொறுமையைத் தேய்த்து போரற்றிருந்த பாண்டிய நாட்டின் வாயிலில் போர் வந்துவிட்டதென்றால் மறவர் குலத்தவர் பொருந்தி வாழ்வரோ? நான் என்றும் இறக்கக்கூடியவனே. ஆனால் யான்பிறந்த மறவர் மரபோ அழிவற்றது; பழியற்றது. ஆகவே, அழிவற்ற என் மரபின் மானத்தைக் காக்க அழியக் கூடிய என் உடலை அர்ப்பணிக்க நேரினும் அஞ்சேன். மற்று, அதை விரும்பிப் பெறுவேன். வீரனுக்குத்

தோல்வி ஏது? மரணந்தான் ஏது? நமது பகைவர் பாண்டிய நாட்டுத் தலை நகரின் மதிலை அழிக்கலாம். அதில் வாழும் மக்களின் மானத்தை அழிக்க முடியாது. நேற்றும் அதற்கு முன் தினமும் என் தந்தையும், பாட்டனும் சென்ற போர்க்களத்திற்கு இதோ யானும் செல்கிறேன்.

தாய் :—என் கவலையைத் தீர்த்த கண்மணியே உன் வீரத்திற்கு மெச்சினேன். விருப்பத்திற்கும் இசைந்தேன். ஆனால் ஒன்று சொல்கிறேன் கேள். பகைவனின் படையைப் பிளந்து சென்று பின் வாங்காது போர் புரிந்து வெற்றி கொள். இல்லையேல், மாற்றான் விடும் வேலாயுதம் உன் மார்பை முத்தமிடட்டும். தமிழகத்தின் வீரம் விளங்கப் போர் புரிவாயாக. தமிழன்னை உன்னைக் காப்பாள்.

அன்னையின் ஆசி பெற்று மகன் போர்க்களம் புகுந்தான். காலையில் போர்க்களம் சென்ற மகனின் முடிவைப் பற்றி மாலையில் தாய்க்குச் செய்தி கிடைக்கிறது. அவள் மகன் போர்க்களத்தில் பின்வாங்கி ஓடுகையில், புறமுதுகில் அம்புபட்டு மாய்ந்தான் என்பதே அச் செய்தி.

இந்தப் பழிச் சொல்லைக் கேட்டு அவள் மனம் பதறியது. சினங்கொண்ட அவள் சீறி எழுந்து, “ இதோ, போர்க்களம் செல்வேன். அங்கு என் மகன் புறமுதுகில் அம்புபட்டு மாண்டு கிடப்பது உண்மையாயின், அந்தப் பேடி மகனுக்குப் பால் கொடுத்த என் முலையை அறுத் தெறிவேன் ” என்று சபதம் செய்து வளையல் அணிந்த கையில் வாளேந்திப் போர்க்களம் புகுந்தாள்.

போர்க்களத்தில் மகன் மார்பில் அம்புபட்டு மல்லாந்த வண்ணம் மண்மேல் படுத்திருப்பதைக் கண்டாள். தன்னுயிர்

கொடுத்து தமிழரின் வீரத்தைக் காத்த மகனே அங்கு அவ ளுக்குக் காட்சியளித்தான். அங்கிலே கண்டு அந்த வீரத் தாயின் உள்ளம் பூரித்தது. மாண்டு கிடந்த மகனை மார்புறத் தழுவி முத்தமிட்டாள். அவனை ஈன்றபொழுது கண்டு களித் ததைவிட மார்பில் அம்புபட்டு மாண்டு கிடந்த காட்சியே அவள் மனதிற்கு உவகை யளித்தது.

இன்றைய அடிமை நாட்டுத் தமிழ்ப் பெண்களுக்கு வழி காட்டி மறைந்த வீரத் தாய் வாழ்க!

குறிப்பு:—புறநானூற்றில் 278, 279 பாடல்களைத் தழுவி எழுதியது.

---

## அடுத்த இதழில்!

தமிழரும், அரசியல் நிர்ணய சபையும்

கண்ணகிக்குக் கோயில் உண்டா?

—ம. பொ. சி.

# குதிரை வீரன்

ரா. பி. சேதுப் பிள்ளை

தமிழ் நாட்டில் பெண்ணையாறு பாயும் நன்னாடு முன்னாளில் வண்மைக்கும் திண்மைக்கும் உறைவிடமாய் விளங்கிற்று. அந்நாட்டை நெடுங்காலம் மலையமான் என்னும் பெயருடைய சிற்றரசர் ஆண்டு வந்தனர். அக்காரணத்தால் மலையமானாடு என்ற பெயர் அதற்கு அமைவதாயிற்று. பெண்ணையாற்றின் தென் கரையில் உள்ள திருக்கோவலூர் அதன் தலை நகரமாகத் திகழ்ந்தது.

மலையமான் குலத்திலே காரி என்பவன் தோன்றினான். அவன் இணையற்ற குதிரை வீரன். தமிழ் நாட்டு முடி வேந்தர் மூவரும் அவன் படைத் துணையை நாடினர். தன் கருத்தறிந்து விருப்புடன் பணி செய்த குதிரைக்குக் காரி தன் பெயரைத் தந்து மகிழ்ந்தான். அக்குதிரையின் திறமையால் கடும் போர்களில் வெற்றி பெற்றான் அவ்வீரன்.

"காரி ஊர்ந்து பேரமர் கடந்த
மாரி ஈகை மறப்போர் மலையன்"

என்று புலவர் புகழ்ந்து பாடுவாராயினர். மலையனைத் தாங்கிச் செல்லும் காரியின் வேகத்தால் மண் நடுங்கும்; மாற்றார் மனம் ஒடுங்கும்.

இவ்வாறு காரி வீரப்புகழ் பெற்று விளங்கிய காலத்தில் மற்றொரு சிற்றரசன் கொங்கு நாட்டுக் கொல்லி மலையை ஆண்டு வந்தான். ஓரி என்பது அவன் பெயர். "வில்லாளர் ஆனார்க்கெல்லாம் மேலவனா"கிய அவ்வீரனை "வல்வில்ஓரி" என்று தமிழகம் வியந்து புகழ்ந்தது.

எக்காரணத்தாலோ காரிக்கும் ஓரிக்கும் இடையே கடும் பகை மூண்டது. போர் நிகழ்ந்தது. செருக்களத்தில் ஓரியைக் காரி கொன்றான். அவன் மலையைக் கைக் கொண்டான். அதற்கு உரிமை யுடைய சேரமானிடம் ஒப்புவித்தான். அன்று முதல் சேரமானும் மலையமானும் சிறந்த நண்பராயினர்.

வில்லாளருள் வல்லாளனாகிய ஓரியை முடித்த வீரன் என்று எல்லோரும் காரியைப் பாராட்டினார்கள். அவ்வுரை கேட்டு அகமகிழ்ந்த காரி தன் நாட்டின் சுதந்திரத்தை நிலையிடக் கருதினான். அவன் முன்னோர் சோழ மன்னர்க்குத் திரை செலுத்தும் சிற்றரசராய் வாழ்ந்தனர். முடி சூடி அரசாளும் உரிமை அவர்க்கில்லை. அந்த நிலையை மாற்ற ஆசைப்பட்டான் காரி. மலையமான் நாடு தன்னரசு பெற்ற தனி நாடாதல் வேண்டும் என்பது அவன் வேட்கை. சிற்றரசர் சிலர் அவன் கருத்தை ஆதரித்தனர். தலை நகரில் முடி சூடி அரசாள்வதே தக்கதெனத் துணிந்தான் அவ்வீரன்.

திருக்கோவலூர் புத்துயிர் பெற்றாற் போல் பொலிவுற்றது. வீடுதோறும் சுதையின் விளக்கம்; வீதி தோறும் மங்கல முழக்கம். மாட மெங்கும் மணிக் கொடிகள்; ஆடரங்கில் ஆடல் பாடல். அரண்மனையில் இன்னிசை யாழினர் ஒரு பால். பல்லாண்டிசைக்கும் பாவலர் ஒரு பால். படைத்திறம் வாய்ந்த போர் வீரர் ஒரு பால். கொடைத்திறம் உடைய கொற்றவர் ஒரு பால். இங்ஙனம் நல்லாரும் வல்லாரும் அணியணியாக அமர்ந்திருந்த மன்றத்தின் நடுவே நின்றது ஓர் அரியாசனம். அதன் மீது வீரசிங்கம்போல் வீற்றிருந்தான் மலையமான் காரி. மங்கல முழக்கத்தினி

டையே குடி படையின் சார்பாகப் பெண்ணை நாட்டு அறிவர் ஒருவர் அவனுக்கு மணி முடி சூட்டினர்.

அன்று தொட்டு மலையமான் திருமுடிக் காரி என்னும் விருதுப் பெயர் கொண்டு அவன் அரசு வீற்றிருந்தான்.

என்றும் வாடாத் தமிழ் மாலை பெற்ற வள்ளல்களில் ஒருவன் இம்மன்னன். பொய்யறியாக் கபிலர் இப்பெருந்தகையைப் புகழ்ந்து பாடியுள்ளார். "கபிலர் பாடிய காரியை நாம் பாடுதல் எளிதோ" என்று கருத்தழிந்து நின்ற கவிஞர் பலர். அவருள் ஒருவர் நப்பசலையார் என்னும் பெண் புலவர்.

"நிலமிசைப் பிறந்த மக்கட் கெல்லாம்
புலன் அழுக்கற்ற அந்த ணாளன்
இரந்து செல் மாக்கட்கு இனியிடன் இன்றிப்
பரந்து இசை நிற்கப் பாடினன்"

என்பது பசலையார் பாட்டு. எனவே புலவர் பாடும் புகழுடையவன் திருமுடிக்காரி. பெண்ணை நாட்டுக்குப் பெருமையளித்தவன் திருமுடிக்காரி. வீர சுதந்தர வேட்கையின் சின்னமாக விளங்குபவன் திருமுடிக் காரி. "என்று தணியும் இந்த சுதந்தர தாகம்" என்று ஏங்கி நிற்கும் மாந்தர்க்குக் கலங்கரை விளக்கமாக நிற்பவன் திருமுடிக் காரி.

---

# எண்ணிப் பாருங்கள் !

- மு. வரதராசனார்

என்ன கிடைக்கும்? எங்கே கிடைக்கும்? எப்படிக் கிடைக்கும்?—இந்த மூன்று கேள்விகளே இன்று எல்லாரையும் அலைத்து வரும் கேள்விகள். ஏழைத் தொழிலாளியும் பொருள் தேட இவ்வாறு அலைகின்றான். பெரிய முதலாளியும் செல்வம் தேட இவ்வாறு அலைகின்றான். ஆனால் தொழிலாளியின் தேவை குறைவு; அலைச்சலும் குறைவு. முதலாளியின் தேவை மிகுதி; அலைச்சலும், கவலையும் மிகுதி.

பணம் கிடைத்தபின், உணவுப் பொருளைத் தேடி அலைய வேண்டியிருக்கின்றது. அரிசி, கடலைப் பருப்பு முதலான உணவுப் பொருள்களைத் தேடித் தேடி அலைய வேண்டியிருக்கின்றது. என்ன கிடைக்கும், எங்கே கிடைக்கும், எப்படிக் கிடைக்கும் என்று வயிறு பெற்றவர்கள் அலைய வேண்டியிருக்கின்றது. அதே நிலையில், கள்ள வாணிகம் செய்யும் வியாபாரிகள், இந்த உணவுப் பொருள்களைக் குவித்து வைத்துக் கொண்டு, இவற்றை விற்றுக் கொள்ளை லாபம் பெறுவதற்காக, "என்ன லாபம் கிடைக்கும்? எங்கே கிடைக்கும்? எப்படிக் கிடைக்கும்?" என்று அலைகின்றார்கள். அந்த வேளை உணவுப் பொருளுக்கு அலைந்து வாடுவோர் பலர்; ஓயாமல் அலைந்து கொள்ளை லாபம் பெறுவோர் சிலர்.

படித்துப் பட்டம் பெற்ற பிறகு, வேலை இல்லையே, எங்கே கிடைக்கும் என்று அலைவோர் பலர்; கிடைத்த

வேலை எத்தனை நாள் நீடிக்கும் என்று ஏங்குவோரும் பலர். வேலை கிடைத்து நீடித்த பின், 'அந்தத் துறையில் என்ன லஞ்சம் கிடைக்கும், எப்படிக் கிடைக்கும் என்று விழிப் போடு அலைவோர் பலர். கிடைத்த லஞ்சத்தைக் கண்ணும் கருத்துமாய்க் காத்துப் பிறர் அறியாமல் பெருஞ் செல்வ ராகி மாடி வீடுகளும் நன்செய் நிலங்களும் வாங்க அலைவோர் சிலர்.

ஒரு துறையில் தொழிலாளி—முதலாளி நடத்தும் போர். ஒரு துறையில் வயிறு படைத்தவனும், கள்ள வாணிகனும் நடத்தும் போர். ஒரு துறையில் வழியற்றவ னும் 'லஞ்சம் வாங்கி'யும் நடத்தும் போர். இவை சிறப் பான துறைகள். இப்படிப்பட்டவை—ஆனால் விளம்பரம் அற்றவை—இன்னும் எத்தனையோ உள்ளன.

இந்த நிலைமை தான் சீர்கெட்ட ஒரு நாட்டின் சிறப் பியல்பாகும். நாடு சீர் பெற வேண்டுமானால், இந்த நிலைமையை மாற்ற வேண்டும். அதற்கு ஏற்ற முறையில் முயற்சிகள் செய்ய வேண்டும்.

இப்போது நம் நாட்டில் இந்த முயற்சிகள் நடைபெறு கின்றனவா? மேற் போக்காகப் பார்த்தால், ஒரு முயற்சியும் நடைபெறவில்லை என்று சொல்லிவிடலாம். ஆனால் அது உண்மை அல்ல. கண்ணை மூடிக் கொண்டோ, கையைக் கட்டிக் கொண்டோ "எல்லாம் நன்மைக்கே" என்று சொல்லிக் காலம் கழிக்கும் மக்கள் தொகை வர வரக் குறைந்து விட்டது என்பது தெளிவு. "ஏன் இப்படி இருக்க வேண்டும்? இது கொடுமை அல்லவா? எத்தனை நாள் இந்த வாழ்வு?" என்று எண்ணித் துடிக்கும் மக்கள் தொகை படிப்படியாக வளர்ந்து வருகின்றது.

முதலாளி என்று கனவில் கண்ட போதும் அன்பும் அமைதியும் கொண்டு வழிபட்டும் தொழிலாளிகள் மறைந்து வருகின்றார்கள். கள்ள வாணிகத்தைக் கலைத்துச் சூறையாட வேண்டும் என்று நாட்டுப் புறத்து மக்களும் ஒவ்வொரு வேளையில் வாயால் பேசத் துணிந்து விடுகின்றார்கள். அதிகாரி என்றால் அவனுக்கு எல்லா உரிமையும் உண்டு, லஞ்சம் வாங்குவதும் ஒருவகை உரிமை, லஞ்சம் கொடுப்பதும் ஒருவகைக் கடமை என்ற மனப்பான்மை மண்ணாகி விட்டது; கல்லும் தடியும் கையில் வைத்துக் கொண்டு, புற்றில் ஒடுங்கும் பாம்பைத் தேடுவோரின் மனப்பான்மை பொது மக்களில் ஒரு சிலர்க்காவது வந்து விட்டது அல்லவா?

இது வரையில் மக்கள் ஏமாந்து வாழ்வதே அறம், ஊழ்வினை, ஆண்டவன் செயல் என்று பலவாறு எண்ணி வந்தார்கள்? இன்றும் பலர் அவ்வாறுதான் எண்ணி வருகின்றார்கள். ஆனால், பொல்லாத அறிஞர் சிலர், அந்த இருளைப் போக்கி ஒளி வீசும் பொதுமைக் கதிரவன் எழுந்து வரும் திசையைக் காட்டி விட்டு வேடிக்கை பார்க்கிறார்கள். பொதுமக்களில் சிலர் அந்தத் திசையைப் பார்த்துவிட்டனர். பொழுது விடிந்து விட்டது என்ற நம்பிக்கையும் பெற்று விட்டனர். நம்பிக்கை இழந்து வாடும் மற்றவர்களுக்கு இடித்துரைக்கவும் தலைப்பட்டு விட்டனர். ஏமாந்து வாழ்வதே பாவம் என்று தெளிந்து விட்டனர். ஏமாற்றத்தைத் தொலைப்பதே அறம், அதற்காக உயிர் வாழ்வதே ஊழ், அதற்காகப் போராட்டம் நடத்துவதே ஆண்டவன் செயல் என்றெல்லாம் உணர்ந்து விட்டனர்.

இன்னும் சில காலம்—சில ஆண்டுகள் நாட்டில அமைதி இருக்கலாம்; நீடிக்கலாம். ஆனால், இந்த உண்

மையை எல்லாரும் உணர வேண்டும். அமைதி நீடிக்க நீடிக்க, இரத்தப் புரட்சிக்கு வழி கோலுவதாக முடியும். ஆகையால், இப்போது அமைதி நீடிக்குமாறு விடுவது பெரும்பாவம்! அன்பான புரட்சியால், வேண்டிய மாறுதல்களைச் செய்து நாட்டைச் சீர்ப்படுத்த முயல வேண்டும். இது முதலாளிகள் கையிலும், வியாபாரிகள் கையிலும், அதிகாரிகள் கையிலும் உள்ளது. இவர்களுக்குப் பரந்த நோக்கம் வேண்டும். இப்போது அமைதியைக் காத்துக் காலம் தள்ளலாம் என்று எண்ணி விட்டால், அந்தக் குறுகிய நோக்கம் எதிர்காலத் தொல்லையைப் பெருக்கிவிடும்! இரத்தப் புரட்சிக்கே வழி கோலுவதாகும். நாட்டின் நன்மையையும் தங்கள் நன்மையையும் கருதிப் பரந்த நோக்கம் கொண்டு, பொது மக்கள் நோக்கும் திசையைத் தாங்களும் நோக்குவார்களா? பொதுமைக் கதிரவன் புதுமைக் கதிர்களை வீசி எழுவான் என்பதை உணர்ந்து கொள்வார்களா? ஏய்ப்பது, ஏமாற்றுவது, அடக்குவது இவற்றுக்கு இடம் தந்த இராக்காலம் முடிந்து விட்டது என்பதை அறிந்து திருந்துவார்களா? எது அறம், எது முறை, எது இறைவன் செயல்—என்று உண்மையாக உணர்வார்களா? "என்ன கிடைக்கும்? எங்கே கிடைக்கும்? எப்படிக் கிடைக்கும்?" என்று அலையும் கவலையை விட்டு, "என்ன வேண்டும்? எல்லோருக்கும் பொதுவாக என்ன வேண்டும்? நாடு சீர்பெற என்ன வேண்டும்?" என்று எண்ணிப் பார்ப்பார்களா? வீணான, கொடுமையான, நடுங்கச் செய்வதான பொல்லாப் புரட்சியைத் தடுக்க வழி உண்டு என்று எண்ணிப் பார்ப்பார்களா?

---

# தலைவிதி!

கோ. மோ. ஜனார்த்தனம்

மனித சமுதாயத்தில் எவ்வளவோ காலமாக வழங்கி வரும் சொற்களில் தலைவிதியும் ஒன்று. நம் பாட்டிமார்களின் தத்துவமே தலைவிதியைத் தழுவியதுதான். ஆனால் நம் நாட்டின் முன்னேற்றத்தைத் தடுத்து வரும் தடை விதியும், இத் 'தலைவிதி' தான். மகமதியர் படையெடுத்து வந்த காலத்திலும், பின்னர் ஆங்கிலேயர் நம் இந்திய கண்டத்தில் ஆதிக்க வலை வீசி நம்மை அடிமை கொண்ட காலத்திலும், மக்களைத் தட்டி எழுப்ப முடியாமல், தோல்விக்குப் பணிந்து கொடுக்கச் செய்ததும் இந்தத் 'தலைவிதி' தான். ஏழைகள் வறுமையால் வாட்டமுற்று, அல்லலுற்று, ஆற்றாது அழுத காலையில், அவர்கள் சோர்வுள்ளத்தை மருட்சியடையச் செய்யும் மயக்க மருந்தாக இருந்ததும் இந்தத் தலைவிதித் தத்துவம்தான். சமூகத்திலே தீண்டாமையை வளர்ப்பதற்கும், ஒடுக்கப்பட்டார் உள்ள எழுச்சியை அடக்குவதற்கும் தாரக மந்திரமாக இருந்ததும் இந்தத் தலைவிதிதான்.

தலைவிதித் தத்துவம் பழமை தொட்டு, நம் நாட்டு மக்களின் மனதில் வேரூன்றி இருக்கின்றது அதனால் ஒன்றும் தவறில்லை. வினைத் தொடர்புகளின் விளைவு விதி. பழவினை, நிகழ்கால வினை, எதிர்கால வினை என்பவற்றின் இயக்கத்தின் கருவியாக இருப்பது விதி என்று கூறப்படுகின்றது. ஆனால், தலைவிதி என்பது, மனிதன் அறிவால் அரிதியிட்டுக் கூறமுடியாத சில காரண காரியத் தொடர்புகளின் இயக்கத்தை வருணிக்கும் ஒரு முறையாகவே தான் கொள்ளவேண்டும். பலவிதமான சிக்கல்களில் வாழ்பவன்

TAMIL NADU ARCHIVES MADRAS No. 102044

மனிதன். அவனுடைய காரியங்கள் பல காரணங்களால் ஆக்குவிக்கப்படுகின்றன. சிற்சில சமயங்களில் அவன் எண்ணித் துணியும் கருமங்கள் கூட, எண்ணிய, எண்ணியாங்கு எய்த முடியாமல் போகின்றது. பகுத்தறிவும் பயனற்றுப் போய்விடுகின்றது. ஏதோ ஒரு மலைப்பும், கலக்கமும் ஏற்படுகின்றது. இத்தகைய சந்தர்ப்பங்கள் எல்லா மனிதர்களுடைய வாழ்க்கையிலும் நிகழ்கின்றன. ஆனால் இந்நிலை, எப்பொழுதும் நின்று நிலவுவதன்று. மின்னல் போல் தோன்றி மறைவது. மறுபடியும் தெளிவு ஏற்படும். மயக்கம் தீரும். மருள் போகும். முறையும், ஒழுங்கும் ஏற்படும். இந்த மயக்க நிலையில்—விளக்கமற்ற மன நிலையில், அவனுக்குத் தோல்வி மனப் பான்மை உண்டாகாதவாறு தடுக்க உதவுவது தான் இத் “தலைவிதி!” என்னும் சொல். ஆற்று வெள்ளத்தில் அடித்துக் கொண்டுபோகும்பொழுத, துரும்பினையும் பிடித்து உயிர் தப்ப முயலும் ஒருவனைப் போல் தான், இத்தலைவிதி தத்துவமும் கால வெள்ளத்தில் இயங்கிக் கொண்டு போகும் உலக வாழ்க்கையில் இடர் வயப்பட்ட ஒருவனுக்கு, நம்பிக்கையை வளர்க்கும் சாதனமாக இருக்கின்றது.

ஊழின் சரியான பொருளை உணர்ந்து தான் இருக்கின்றார்கள் கவிவாணர்கள். ஷேக்சிபியரும் தன் நாடகங்களில் தலைவிதித் தத்துவத்திற்குப் பல இடங்களில் விளக்கம் செய்துள்ளார்.

பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டு தான், ஊழின் வலியை வரையறுத்தார்கள் பழந்தமிழர்கள். தலைவிதி, வாழ்க்கையின் காப்புவிதி என்பதே அவர்கள் நோக்கம். இயற்கையின் முறை வழித்தான் ஆருயிர் இயங்

0-,6x
N46·3

கும் என்பது அவர்கள் தெளிந்த உண்மை. பரந்த வாழ்க்கை அமைப்பின் அடிப்படையாக இயங்கும் அறத்தைத் தான் "ஊழ்" என்றனர். விஞ்ஞானி தான் காணும் பருப் பொருள்களின் பன்மையினையும், வேறுபாட்டினையும் உய்த்து ஆராய்ந்து, அவற்றின் இயக்கத்திற்குக் காரணமாயிருக்கும் மூல உண்மையினை விதிகள் மூலம் விளக்குவது போல், பரந்து, விரிந்து பலவிதமான மன நிலைகளுக்கும், எண்ண ஓட்டங்களுக்கும், உணர்ச்சிப் பிணிப்புகளுக்கு மிடையில் நடத்தப்படும் மனிதவாழ்க்கையின் இயக்கத்தைப் புலப்படுத்தும் பொதுமை விதியாகத் தமிழ்ச் சான்றோர்கள் ஊழினைக் கொண்டார்களே தவிர, முயற்சியை அடக்கும் முறையாகக் கொள்ளவில்லை. சோர்வினை வளர்க்கும் சொத்தை வேதாந்தமாக-நம்பிக்கையைக் கொல்லும் நச்சரவாகக் கருதவில்லை. வாழ்வின் பொதுமுறைப் போக்கினை விளக்கும் பொது விதியாக அச்சத்தையும், ஆசையையும் அகற்றும் அருமந்திரமாகக் கருதினார்கள். நடுநிலைமைக்கு நல்ல மார்க்கமாக மதித்தார்கள்.

இனி, வள்ளுவரைக் கேட்போம். உலகத்தார் உள்ளுவதெல்லாம் ஓர்ந்து இரண்டடியில் கூறியவரல்லவா அவர்! வள்ளுவர் ஊழின் இரண்டு அம்சங்களையும் கூறுகின்றார். ஊழின் பேரியக்கத்தினையும், ஆற்றலையும், "ஊழிற் பெருவலி யாவுள?" என்ற வினாமூலம் விளக்கினார். 'ஊழ்வினை பையப் புகும்' என அதன் நுண்மையினையும், அறிவிற் கெட்டாத நீர்மையினையும் எடுத்துக் காட்டினார். ஆனால், வள்ளுவர் ஊழின் சரியான நிலையை எடுத்து விளக்குவது தான், முன்னேற்றக் கருத்துடைய அறிவாளிகள் மனத்தை ஈர்க்கும் தன்மையதாகும்.

அவர் கூறுகின்றார்:

"ஊழையும் உப்பக்கம் காண்பர்; உலைவு இன்றித்
தாழாது உஞற்று பவர்"

இக்குறள், முற்போக்கின் குரல் என்று கூறி விடலாம். நம்பிக்கையை வளர்க்கும் நல்ல மருந்து இக்குறள். மனித குலத்தின் வளர்ச்சியை எந்த முறையாலும் தடுத்து விட முடியாது. ஊழின் பெருவலி, உலக இயக்கத்தில் மனித முயற்சிக்குக் கட்டுப்பட்டுத்தான் கிடக்கின்றது. உழைப்பும், முயற்சியும்தான் வளர்ச்சிக்கு அறிகுறி. முயற்சி திருவினையாக்கும். முயற்சியால் கிட்டாத பொருளில்லை; கொள்ளாத வெற்றியில்லை. அதனால், முயற்சியின்மையை அகற்றி, சோர்வினை ஒழித்து, அறியாமையை அழித்துத் தாழாது உஞற்றுபவரிடத்தில் ஊழின் வலி பெருவலியாகாது; அத்தகையோர் ஊழையும் உப்பக்கம் காண்பர்; எண்ணியதை எண்ணியாங்கு எய்துவர். இது வள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி.

எனவே, இதுகாறும் தலைவிதித் தத்துவத்தை ஆராய்ந்தோம். வாழ்க்கையில் ஏற்படக்கூடிய சில சிக்கல்களின் உண்மைக் காரணம் நம் அறிவுக்குப் புலப்படாத நேரத்தில் ஏற்படும் மருட்சி நிலையில் வாழ்வில் நம்பிக்கைக் கொள்ள ஏதுவாக இருப்பது தான் தலைவிதி - ஊழ். மயக்கம் தெளிந்தபின், புதிய ஆர்வத்துடனும், வினைத் திட்பத்துடனும் வாழ்வில் ஊக்கங் கொண்டு முயற்சி செய்தால், ஊழையும் உப்பக்கங்காணலாம். ஆதலால், ஊழ் மருட்சியடையச் செய்வதன்று; முயற்சியைக் குறைப்பதன்று; ஆனால் முயற்சிக்குத் தூண்டுகோல்; நம்பிக்கைக்குப் பிறப்பிடம் என்பதே நாம் கண்ட முடிவு.

ஆனால், இன்று 'தலைவிதி'யால் ஏற்படும் விளைவுகள் என்ன? ஏழை யொருவன் உணவின்றி வருந்தி மானத்தைக் கைவிட்டு இரந்தேங்கி வரும்போது, அவனைப் பார்த்து ஊளையிடும் பணக்காரனுக்கு அந்த வறியோனை வைதபின் வேதாந்தம் பேச 'தலைவிதி' உதவுகிறது. அதனைக் கேட்டு விம்மிப் பெருமூச்சுவிடும் அந்த சோர்வுக் குரலிலே எதிரொலிப்பதும் அதே 'தலைவிதி' தான்!

நாளெல்லாம் உழுது, வெயிலில் வெந்து, வியர்வை சிந்தி, விலா நோக உழுதுழைக்கும் உழவன், அறுவடைக் காலத்தில் ஆண்டான் அதட்டி, அரிய நெற் குவியலை அபகரிக்கும்போது நெஞ்சு துடிக்க, இதயங் கலங்க எழும்பும் முனகல் ஒலியில் எதிரொலிப்பதும் அதே 'தலைவிதி'தான்.

இரும்பைக் காய்ச்சி உருக்கும்கம்மானின் கூலி விகிதத்தை எஜமான் நிர்ணயிக்கும்போதும் அதே 'தலைவிதி'தான்.

இப்படி வர்க்க உணர்ச்சியைக் குறைக்கும் மாயயந்திர மாக இந்தப் பாழும் 'தலைவிதி' செய்த கொடுமை சொல்ல முடியாது.

என்ன அநீதி! தன் வாழ்க்கையில் துன்பம் வந்த போது, தன்னம்பிக்கையை வளர்ப்பதற்குச் சாதகமாக வேண்டுமானாலும் தலைவிதியை சொல்வது இயற்கை! ஆனால், பிற உயிர்கள் இன்னலுற்று இதயம் நொந்த காலத்தும் வாய் கூசாது, மனங் கசியாது, 'தலைவிதி'ச் சாக்கைக் கூறிப் பிதற்றும் இந்த மனிதர்களின் நெஞ்சுரத்தை என்னென்பது!

---

# மணிமேகலை

தே. போ. மீனாட்சிசுந்தரனார்.

## I

## அமுதசுரபி

நாட்டிற் சிறந்தது தமிழ் நாடு. பாட்டிற் கனிந்தது தமிழ் நாடு. தமிழன்னை, தோன்றியநாள் தொடங்கி இன்று வரையும் இளமையும் கட்டழகும் மாறாது இனிதே பாடி வரும் வளம் மிக்க தொரு வானம்பாடியாகத் தோன்று கிறாள். சிலப்பதிகாரம் பாடிய குயிலாள் இவளே. மணி மேகலை பாடிய பூவை (மைனா) யாள் இவளே. ஆனால், இன்றோ மழையின்றி வறண்டு, உணவின்றி ஒடுங்கி, இற கொடிந்து வீழ்ந்து, நெஞ்சுடைந்து நைந்து, குற்றுயிரும் குறையுயிருமாய்க் கிடக்கின்றாள். "உணவு தேடுவதா? பாட் டுப் பாடுவதா" என்று பலர் கேட்கின்றனர். உணவு தேடு வதும் பாடுவதாக முடிவதனை அவர்கள் அறியவில்லை. அவள் வாடி வதங்கிப் புலம்புவதும் பாரதிப் பாட்டாகவே எழுகிறது. தமிழின் உயிரே பாட்டானால் அவள் இயக்க மெல்லாம் பாட்டாவதில் வியப்பு என்ன? 'பாட்டு வேண் டாம்' என்பவர் தமிழ் வேண்டாம் என்பவரே. மணிமேக லைப் பாட்டு வேண்டாம் என்பாரும் அவரே ஆம்.

பட்டினி என்ற எரிமலை ஏழைத் தமிழன் அடி வயிற் றில் புகைக்தெழுந்து புரட்சிக் கனலைக் கக்குகிறது. ஆம்! ஆங் கில வல்லரசும் இது கண்டு தனியரசினை நிலை நாட்ட வாய்ப் பறை சாற்றுகிறது. சோற்றுக்குக்காற்றாய் அலையும் பாட்டே இந்நாட்டில் கேட்கிறது. இது புதிய பாட்டன்று. மணி

மேகலையிலும் பட்டினிப் பாட்டு உண்டு. காலத்திற்கேற்ப எழும் தலைசிறந்த பாட்டுக்கள் அந்தக் காலத்தோடு நின்று விடாது காலத்தையும் கடந்து எக்காலத்தவர் நெஞ்சினையும், அள்ளும் இயல்பு வாய்ந்தவையாகும். காலனைக் கடந்த கடவுள் காவியமேயாம். மணிமேகலையும் அத்தகையதொரு தலை சிறந்த காப்பியமானால் நம்காலத்தை அது எட்டிப் பாராது இருக்குமா?

நாகரிகம் அலைபோல மாறிமாறி மேலெழுந்தும் கீழ் அழுந்தியும் வரக் காண்கிறோம். கரிகாலனது நாளில் அவனுடைய நாடு அறமுறையிற் சிறந்தோங்கியது. "அறம் துஞ்சு உறந்தை" என்று அவனுடைய தலை நகரைப் புகழ்ந்து புலவர் பாடினர். அந்தச் சோணாட்டிலே உதயண குமாரன் தோன்றி அறம் திறம்பி உயிரிழக்கும் காட்சியை மணிமேகலைப் பாடலில் இன்றும் காண்கின்றோம். அறம் பிறழும் போதெல்லாம் மழையின்றிப் பட்டினி நோய் பரவி வருவது இயல்பு. பட்டினியைத் தீர்க்கும் அமுத சுரபியின் திருவிளையாடலைக் கூறும் நூலே மணிமேகலை என்று சொல்லுவதற்கும் இடம் உண்டு. இந்தப் பட்டினிப் புராணத்திற்கு இன்று இடம் இல்லையா?

"பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் [மழையும்] வளனும் சுரக்க".

என்பது பழைய தமிழ் வாழ்த்து. ஆதலின் தமிழ் அமுத சுரபியைப் பற்றிப் பாட வந்தது வியப்பன்று. பசி நீக்குவதே, விண்ணோர்க்காயினும் மண்ணோர்க்காயினும் சிறந்த அறம் எனத் தமிழர் கண்டதும் மணிமேகலை வழியே விளங்குகிறது.

பசியால் வரும் கொடுமையைப் பசியிடை அலைவாரும் ஆழம் காண்பது அருமை. "பசிவந்திடப் பத்தும் பறந்து போம்" என்ற அவ்வையாரின் பாட்டைப் பல முறை பாடிப் பழகியதால் இதில் புதியதாக நமக் கொன்றும் தோன்றுவதில்லை. பசிவாய்ப்பட்டு வாடுபவன் விலங்கெனக் கீழ்ப்படுகின்றான். அவனுக்கு மக்கள் வாழ்க்கையின் சிறப்புத் தோன்றுவது எங்கே? கலை தோன்றுவது எங்கே? அருள் தோன்றுவது எங்கே? ஆண்டவன் தோன்றுவது எங்கே? மணிமேகலை பாடிய சீத்தனார் தீவதிலகை வழியாகக் கூறுவதனை யாவரும் கேட்டல் வேண்டும்.'

"குடிப் பிறப்பழிக்கும்; விழுப்பம் கொல்லும்;
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்:
நாணணி களையும்; மாணெழில் சிதைக்கும்;
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்;
பசிப்பிணி என்னும் பாவி; அது தீர்த்தோர்
இசைச் சொல் அளவைக்கு என் நா நிமிராது

என்பதோடு நிற்கவில்லை.

"ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகில் மெய்ந் நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

என்று அனைத்துயர்விற்கும் அடிப்படையாவது வயிறு வளர்க்கும் பேறமே எனப் பேசுவது காண்க. "அன்னம் பிரம்மம்" என உபநிடதம் கூறிய உண்மையை அறிந்த பின்னரே பேரின்பக் கடவுளும் விளங்கி வருமாம். வறுமைப் பேயினின்றும் இந்த மண்ணுலகினை விடுவிக்கவே

பெரும் போரில் வல்லரசுகள் வாள் எடுத்தன என ரூஸ்வெல்ட் முழக்கிய உரிமை முழக்கம் நம் காதில் இன்றும் முழங்குகிறது.

அமுத சுரபி வந்தால் பசிப்பிணி தீரும். அதனியல்பினைப் புலவர்கள் மிக அழகாகப் புனைந்துள்ளார்கள். கதை மினுக்கில் கண் மயங்கிக் கருத்தினை மறத்தலாகாது. எங்கே தோன்றும் இந்த அமுத சுரபி? வயிற்றுப்பசி ஒரு பொது உடைமை. அங்கே எல்லாரும் ஓர் நிறை; எல்லோரும் ஓர் இனம். இந்தப் பொது உரிமையே வாழ்விற்கு அடிப்படை. பொதுமை நாட்டத்தில் எழுந்தோங்கும் உண்மையே அமுத சுரபியாகும். ஆபுத்திரன் சாதிச் செருக்குடையோரால் இகழப்படுகிறான். கபிலர் அகவலுக்கு வித்து மணிமேகலையில்தான் கிடக்கிறது. அவர்கள் அவனை ஊர் விட்டு ஓட்டுகின்றார்கள்:

ஐயக்கடிஞை கையின் ஏந்தி
மையறு சிறப்பின் மனை தொறு மறுகிக்
"காணார் கேளார் கால் முடப் பட்டோர்
பேணுநர் இல்லோர் பிணிநடுக் குற்றோர்
யாவரும் வருக" என்று இசைத்து உடனூட்டி
உண்டொழி மிச்சில் உண்டு ஓடுதலை மடுத்துக்
கண்படை கொள்ளும் காவலன்.

ஆகின்றான். பொதுமை யுள்ளத்தில் புதுமையறிவு எழுகின்றது. பசியால் வாடுவார் பலராயபோது என் செய்வான்? சிந்தா தேவியை நாடுகின்றான். சிந்தாதேவியே நாமகள். அவள் கோயிலே கலைக் கோயில் அல்லது கலை நியமம். அருள் வடிவாம் பொதுமை யுணர்வு மட்டும் போதாது. அதிலிருந்து அறிவாராய்ச்சி இவ்வாறு பிறத்தல்

வேண்டும். "புத்தகம் படிக மாலை குண்டிகை பொருள் சேர் ஞான - வித்தகம் பிடித்த கெங்கை விமலையை"க் கம்பன் பாடுவது அறிவோம். கலைமகள் கையில் உள்ள குண்டிகையின் நுட்பத்தை மணிமேகலைப் பாட்டே அமுத சுரபி என விளக்கி வைக்கின்றது. அறிவாராய்ச்சியால் பட்டினி போக்கும் முறையே அமுத சுரபியாம் அக்குண்டிகை. "கற்றதனாலாய பயனென் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்" என்று பாடுகிறார் வள்ளுவர். வாலறிவன் நற்றாள் தொழுதலாவது "தரித்திர நாராயணர் வழிபாடே" என்பர் காந்தியடிகளார். நடமாடுங் கோயில் வழிபாடு என இதனைத் திருமூலர் புகழ்வர்.

அறிவாராய்ச்சி ஹிட்லர் நாட்டில் எழுந்தது போலப் பிறரை அடக்கி யாளும் சுரண்டல் வெறியால் எழுந்தால் தீமையே பற்றி எரிந்து பரவும். ஆபுத்திரனிடத்திற் போல அருளில் எழுந்தால் மட்டுமே தண்ணிலவு பொழியும். அதுவே உலகம் உய்யும் வழி. அமுத சுரபி ஏந்தி நிற்போள் அருளே வடிவாம் பெண் கடவுளாதலின் தாய்மையின் இன்றியமையாமை நன்கு விளங்கும். அது மணிமேகலையின் கையிற் புகுவதிலும் அந்த உண்மை வலியுறுகிறது. இந்த அமுத சுரபியில் முதல் முதல் சோறிட்டு வற்றாத வளத்தை வளர்த்தவள் ஆதிரை என்னும் கற்பரசியே ஆம். கற்புடைய பெண்கள் வளர்க்கும் வளமே நாட்டின் பெருஞ் செல்வமாகும் என்பதே கதையின் நோக்கம். "பெண்ணிற் பெருந்தக்கதில்" என்ற வள்ளுவர் வாய்மொழியை மறந்தால், உலகம், பிழைக்கும் வழியறியாது பல பல பித்தேறி அலையவே வேண்டும்.

அமுத சுரபி நீரிடை இருந்தும் எழுந்து மணிமேகலை யின் கையில் புகுகின்றது. புத்தர் பெருமான் அறிவுவிளக் கம் பெற்ற திருநாளில் இந்தக் காட்சி தோன்றுகிறது. நீரினைக் காத்து அதன் ஆற்றலைப் பல்வகையானும் பயன் படுத்தும் உண்மையினையே இந்தக் காட்சி சுட்டுகின்றது. வான் சிறப்புப் பாடிய வள்ளுவர் வழிவந்ததன்றோ மணி மேகலை! "ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்" எனக் கடவுளைக் காணும் நாடன்றோ தமிழ் நாடு. வீணே கடலிற் புகும் வெள்ளத்தினை அடக்கி ஆண்டு அணைகோலித் தேக்கித் தெள்ளமுத ஓடைகளாகவும் மின்சார அருவி களாகவும் வழியவிட்டு நெற்கடலும் பாற்கடலும் சோற்று மலையும் பருப்பு மலையும் படைத்து இயற்கை யன்னையின் வியத்தகு திறமைகளைத் தமதெனக் கொண்டு குழவிகளும் இன்ப அன்பிற் பழகி விளையாடும் அறிவு நிலையை உண்டாக்குதல் வேண்டும். இடுகாடாய் கூத்தாடிய டென்னிஸ் பள்ளத்தாக்கு அமெரிக்காவில் இன்று வானுலகாய் வற்றாத வளங் கொழிக்கிறது. நீபர் அணையோ உருசியரின் (ரஷ்யர்) புத்தூக்கப் பொலிவு. நம் நாடும் கங்கையும் காவிரியும் கலந்தோட அதன் வழியே இயற்கை வளம் எங்கும் பொலிய இன்பம் தேக்கும் பொன்னுடாதல் வேண்டும். இதற்குக் கல்வியறிவும் கலையழகும் பயன்படுதல் வேண்டும். இதுவே நாம் செய்யத் தக்க நாமகள் வழிபாடு. இந்தனையும் இந்தக் காட்சியில் தோன்றுகிறது காண்க.

மாமலர்க் குவளையும் நெய்தலும் மயங்கிய
கோமுகி என்னும் கொழுநீர் இலஞ்சி
இருதிள வேனில் எரிகதிர் இடபத்

தொருபதின் மேலும் ஒரு மூன்று சென்றபின்
மீனத் திடைநிலை மீனத் தகவையிற்
(அதாவது விசாக நட்சத்திரத்தில்)
போதித் தலைவனொடு பொருந்தித் தோன்றும்
ஆபுத்திரன் கையமுத சுரபி.

இந்த அமுதசுரபி சிந்தா தேவியின் திருக்கையில் விளங்குவது போலப் போதித்தலைவனும் புத்தர் பெருமானோடு பொருந்தித் தோன்றும் நுட்பத்தினையும் கருதித் தெளிதல் வேண்டும். பசியாற வேண்டுவது இன்றியமையாததே ஆம். ஆனால் "அன்னம் பிரம்மம்" என்பது முடிந்த முடிபன்று. சோற்றுச் செருக்கில் நெய்யில் மூழ்கியவர் பன்றி போலத் திண்ணையில் படுத்து உருளுவதன்றி அறிவு உலகிற் புகுவதில்லை. கலை வாழ்வாம் அழகு வாழ்வும், கடவுள் வாழ்வாம் அருள் வாழ்வும் வாழ எண்ணாது விலங்கு வாழ்வாம் பொருள் வாழ்விற் புகுந்தலைவார் வெறி மீறி உலகினைப் போரிடையே தீவைத் தெரிப்பதனைக் கண்டோம். கலை வாழ்வின் பொதுமை நிலையே புத்தர் முதலிய வள்ளல்கள் கண்ட அருள் வாழ்வாம். அதுதான் செம்மை வாழ்வு; நல்வாழ்வு. செங்நெறி; நன்னெறி. அதனை மறந்த சோற்றுலகம் பன்றிக் கொட்டிலேயாம். உண்பதும் தின்பதும் உருண்டுறங்கிக் கொழு கொழுப்பதும், புற்றீசல் போலப் பொல பொல எனப் பெருகுவதும் வாழ்வாவதில்லை; சாவதற்கு ஆளைத் தேடி வளர்ப்பதே ஆம். ஆபுத்திரனை வாழ்த்த வருகின்றான் இந்திரன். அருள் வாழ்வு வாழும் வீட்டுலகினும் பொருள் வாழ்வு வாழும் வானுலகம் வேறு. அதனை எள்ளி நகையாடுகின்றான் ஆபுத்திரன். அமுத சுரபி பயனற்றுப் போகும்படி மழை சுரந்து வளம்

பூத்து உலகம் பொலியுமாறு செய்து தன் வஞ்சத்தைத் தீர்க்கின்றான் இந்திரன். ஆனல் இந்தச் சோற்றுலக வாழ்வால் என்ன பயன்?

> விடரும் தூர்த்தரும் விட்டேற்றாளரும்
> நடலை மாக்களும் நகையொடு வைகி
> வட்டுஞ் சூதும் வம்பக் கோட்டியும்
> முட்டா வாழ்க்கை முறைமை யதாக

உலகம் மாறும் கதையை இன்றும் செல்வங் கொழிக்கும் நாடுகளில் நாளும் காண்கிறோம்; கேட்கிறோம்.

அடுப்பாரும் கொடுப்பாரும் இல்லாத நாட்டில் அருள் வாழ்விற் கிடம் இல்லை. ஆதலால் வானேரை விட வன்கணாளர் இல்லை என்கின்றார் வள்ளுவர். அங்ஙனமாயின் இரவலாளர் இருந்தே தீர வேண்டுமோ? இரந்தும் உயிர் வாழ்தல் உண்டெனில் பரந்து கெடுக உலகியற்றியான் எனப் பொது உடைமை பேசும் வள்ளுவர் இரவலாளர் இருக்கும் உலகினையோ எண்ணுவார்? ஒருவரோடு ஒருவர் அன்பொடு பிணைந்து அன்பினை நாடாது புலிபோலத் தனித் தனி வாழும் கொள்ளை வாழ்வு வாழ்கின்றாரையே வள்ளுவர் வெறுக்கின்றார். பொது வாழ்வு வாழும்போது தான், அடுத்தும் கொடுத்தும் அன்பை ஒப்புரவு வழியே வளர்த்துப் பாத்துண்டு மகிழ்ந்து அருள் வாழ்வு வாழ்தல் கூடும். அந்த அருள் வாழ்விற் பழகிய தாலேயே மணிமேகலை வீட்டுலகிற் புகுகின்றாள். தனி வாழ்வாம் கொள்ளை வாழ்வின் தன்னலத்தினைத் துறப்பதே மணிமேகலைத் துறவின் நுட்பமாகும். அமுத சுரபி வழியே அதுவும் வெளியாகிறது.

பட்டினி யுலகில் அறம் வளர இடம் இல்லை. சிறைச் சாலையே ஓங்கி வளரும். குற்றவாளிகளை ஆராய்ந்த இந் நாளைய அறிஞர் கண்ட இந்த உண்மை மணிமேகலையிலும் நின்று விளங்கக் காண்கின்றோம். சிறைக் கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை எழுந்து எத்தனையோ நூற்றாண்டுகளாகியும் ஏன் இத்தனை சிறைச் சாலைகள் இங்கும் எங்கும் உள்ளன. மணிமேகலை பாடிய உண்மையினை உணர்ந்து நல்வழிப் படுவது எந்நாளோ ?

அமுத சுரபிக்கு இத்தகையதோர் உயிர் நிலையைச் சாத்தனார் தந்துள்ளாரா ? எமது கனவு தானோ ! அறிஞர் ஆராய்க. சிலப்பதிகாரம் கண்ணகியின் சிலம்பு வழியே தமிழ் உலகின் மூன்று நாடுகளையும் ஒன்றாக்கிப் பாடியது. மணிமேகலையோ அமுத சுரபியின் வழியே தமிழ் நாட்டை ஒன்றாக்கி அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன் எனக் கும்பிடு வழங்குகிறது. பாண்டிய நாட்டுச் சங்கம் தவழ்ந்து மதுரையில் விளங்கிய சிந்தா தேவியின் கையில் ஒளிர்ந்த அமுத சுரபி ஆபுத்திரன் கையில் வந்து அந்த நாட்டுப் பட்டினிப் பேயை ஓட்டியது மணிமேகலையின் கையிற் புகுந்து சோணாட்டுப் புகாரிலும் சேர நாட்டு வஞ்சியிலும் தொண்டை நாட்டுக் காஞ்சியிலும் புகுந்து பட்டினி நோயைத் தீர்த்தது! ஆபுத்திரன் வழியே கிழக்கிந்தியத் தீவுகளுக்குச் சென்று திரும்பியது. தமிழ் நாட்டையும் கீழ் நாட்டையும் இவ்வாறு ஒன்றாக்கி வளர்க்கக் கூடியது அமுத சுரபி ஒன்றே எனச் சாத்தனார் கண்ட காட்சியின் பெருமை இன்னமும் நமக்கு நன்கு விளங்கவில்லை. கலைவாணரும் சிற்பிகளும் அமுத சுரபியைத் தமிழ் நாட்டுத்

தண்ணீரிடையே கண்டு கண்டு எடுத்து நிலை நாட்ட வேண்டும். அது தமிழனது முதற் கடமை.

பட்டினியில் வாடும்போது பாட்டா என்று கேட்பதற்கு இடம் இல்லை. உழைத்து ஓய்ந்தவனுக்கு உலகத் துன்பத்தினை மறக்கக் கள்ளும் பிறவும் வழியாவது போலப் பாட்டும் ஒரு கட்குடியே என்பார் சிலர். கள்ளோ கருத்தினை மயக்கும்; பாட்டோ தெளிந்திடச் செய்யும்; உலகிடையே உண்மையைக் காணும். அரிசி பங்கீட்டின் போதா மணிமேகலைப் பாட்டு என்று கேட்பதற்கு வழியுண்டா? அரிசிப் பங்கீட்டின் போதன்றோ அமுத சுரபியைப் பற்றி எண்ணுதல் வேண்டும். இல்லையானால் திருமதி. சுந்தராம்பாள் வழியே மணிமேகலை வெள்ளித் திரையிலும் எழுந்தலவ வருவாளா?

எல்லா வகைகளிலும் திருப்திதரக்கூடியது

# எங்கள் "சங்கு மார்க்கு"

கைலிகள், ஷர்ட்டிங், கைகுட்டைகள்

சாயத்திற்கும், உழைப்பிற்கும் உறுதியானது

PALAYAKAT COY., LTD. MADRAS ※ MADRAS.

TRADE MARK

**மதராஸ் பளயகாட் கம்பெனி லிமிடெட்.**

"சங்கு நிலையம்" 31, அரண்மனைக்காரத்தெரு, மதராஸ்

கிளைகள்:—218, கீழமாரட்வீதி, மதுரை;

கொளும்பு; கண்டி.

# சோறு போடும் சாமி

போ. குருசாமி.

இராமன் பண்ணையார் வீட்டுத் தோட்டக்காரன். அவனைப் போல இன்னும் ஐந்து பேர் தோட்டத்தில் வேலை பார்க்கிறார்கள். சம்பளம் நான்கு ரூபாய். அவனுடைய மனைவி செல்லம்மாள் யாரோ ஒரு பெரிய மனிதர் வீட்டில் மேல் வேலைகளைப் பார்த்து வருகிறாள். அவளுக்கு மாதம் இரண்டு ரூபாய் கொடுக்கிறார்கள். இவர்களிருவருக்கும் அருமையாகப் பிறந்த பையன் வேலையா; அவனுக்கு வயது நான்காகிறது. இந்தக் குடும்பத்தின் மொத்த வரும்படி ஆறு ரூபாய். அவர்களுடைய வாழ்க்கை எப்படி கழியுமென்று பார்த்துக் கொள்ளுங்கள்.

செல்லம்மாள் தெய்வ பக்தி மிகுதியாக உடையவள். நாள் தோறும் விளக்கேற்றி வைத்து வணங்குவாள். என்றைக்காவது 'சீதேவி கண்ணைத் திறந்து பார்க்க மாட்டாளா' என்று அவள் அடிக்கடி சொல்லிக் கொள்வாள். அவளுடைய ஆசையெல்லாம் அருமையான பிள்ளை வேலையன் துன்பமில்லாமல் வளர்ந்து படித்துவிட வேண்டும். படித்துவிட்டால் சம்பாதிக்க ஆரம்பித்து விடுவான். பிறகு கவலை ஏது........?

தினமும் தன் தாய் விளக்கைக் கும்பிடுகிறது எதற்காக என்று வேலையனுக்குத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆவல். வெளிச்சங் கொடுக்கிற விளக்கைக் கும்பிடுவதின் அர்த்தமே அவனுக்கு விளங்கவில்லை போலும்!

'ஏம்மா, தினமும் விளக்கைக் கும்பிட வேணும்? பெரியவங்களைக் கும்பிட்டா "நல்லாயிருக்கணும்' என்று வது சொல்வாங்க. விளக்கைப் போயி யாராவது கும்பிடுவார்களோ?'

'அடே வேலையா, அப்படியெல்லாம் சொல்லாதேடா கண்ணு. அது வெறும் விளக்குன்னு நெனைச்சிக்கிட்டிருக்கே! சாமிடா! இப்படியெல்லாம் சொன்னால் கோவிச்சுக்குண்டா!'

'கோவிச்சுக்கிடுமா? விளக்கா கோவிச்சுக்கிடும் ?........'

'வெளக்கில்லேடா, அது சாமிடா, சாமி. நாமெல்லாம் தினந்தினம் கும்பிட்டமின்னா நமக்கு வேண்டிய தெல்லாம் கிடைக்கும். அதுக்குத் தாண்டா நான் தினந் தினம் விளக்கு லச்சுமியைக் கும்பிடுகிறேன்.

'ஆமா, நமக்கு வேணுமிங்கிற தெல்லாம் குடுக்குமின்னயே. இந்தச் சாமி நமக்கென்ன குடுத்திருக்கும்மா ?'

'நமக்குக் கிடைக்கிறதெல்லாம் சாமி கொடுத்தது தாண்டா, கண்ணு. சாமி யில்லேயின்னா சாப்பாடு கிடைக்குமாடா. நம்ம சாப்பிடுற கஞ்சி யெல்லாம் இந்த லெச்சுமி யாத்தா கொடுத்தது தானே ?'

'ஆமாம்மா, இந்தச் சாமி நமக்குக் கஞ்சி கொடுத்தா, பெரிய வீட்டிலே எந்தச் சாமியம்மா சோறு கொடுக்குது ? நாம் கூட அந்தச் சாமியைக் கும்பிட்டா நல்லதில்லையாம்மா? அவங்க வீட்டிலே யெல்லாம் மேலேருந்து தொங்குற வெளக்கைத் தாம்மா பார்க்கிறோம். அதைத் தான் கும்பிடுவாங்க போலிருக்கு. பள பளன்னு வெள்

ளேயா இருக்கும்மா—கண்ணாடியாம் அவ்வளவும்...........
அப்பாட்டச் சொல்லி அது மாதிரி வௌக்கு நம்ம வீட்டி லேயும் வாங்கி வைச்சுட்டா அந்தச் சாமியைக் கும்பிட லாமே யம்மா? அப்புறம் தினம் சோறு சாப்பிடலா மில்ல...........'

'சரிடா கண்ணு, அப்பா வர நேரமாச்சு. கொஞ்சம் படுத்திரு. நான் போயிக் கஞ்சி காய்ச்சி விட்டுக் கூப்பிடு றேன். சாப்பிடலாம்'...........

குழந்தை வேலையன் மனம் என்னென்ன எண்ணங் களை யெல்லாமோ எண்ணியது. கஞ்சி கொடுக்கிற சாமி, சோறு கொடுக்கிற சாமி, காப்பி கொடுக்கிற சாமி........... இப்படி எத்தனையோ சாமிகளை அவன் மனம் படைத்து விட்டது. சாமியைப் பற்றி அந்தக் குழந்தை மனத்தில் பதிந்து விட்ட எண்ணம் பலவிதக் கற்பனைகளை உண்டாக்கி விட்டது. எத்தனையோ பல புதுக் கேள்விகளும் எழுந் தன. ஏன் ஒரே சாமியாக இருக்கக்கூடாது? எல்லாச் சாமியும் ஒன்றாக இருந்தால் எல்லோரும் ஒரே மாதிரி யாகச் சாப்பிடலா மல்லவா? அன்றைக் கொருநாள் பண்ணையார் வீட்டுப் பையன் என்னென்னமோ தின் பண்டங்களைத் தின்றானே........அந்தத் தின்பண்டங்களைக் கொடுக்கிற சாமி எது? அதை ஏன் தானும் கும்பிடக் கூடாது?.......இப்படியாக எத்தனையோ கேள்விகள்.

செல்லம்மாளால் குழந்தையின் கேள்விகளுக்கு விடை சொல்லி முடியவில்லை. வேலையிலிருந்து வீட்டுக்கு வந்த இராமனையும் வேலையன் விடவில்லை. இராமனுக்கு இந்த மாதிரியான புதுச் சாமிகளைப் பற்றிக் கேட்பதே புதிதாக விருந்தது. என்னவென்று அவனுக்குப் புரியவில்லை.

'என்னடா கண்ணு, கஞ்சிச் சாமி, காப்பிச் சாமி.... ....இப்படியெல்லாம் யாருடா சொன்னது?'

'அம்மா தானே சொன்னுங்க. வெளக்கை ஏன் கும்பிடணும்மிண்ணு கேட்டேன். அந்த வெளக்குதான் நமக்குக் கஞ்சி ஊத்தற சாமிண்ணு சொன்னுங்க. நம்ம வீட்டிலே கஞ்சிண்ணு, பெரிய வீட்டிலே சோறு தானேப்பா சாப்பிடுறுங்க. அப்படிண்ணு அவங்க சாமி சோறு போடுற சாமி தானப்பா?'

'அடடே, அப்படியா செய்தி........சரிதான். அப்படியில்லேடா கண்ணு. ஒரே சாமிதாண்டா எல்லாருக்குமா இருக்காரு. அவரு இல்லேண்ணு எங்கேயும் வயித்துக்கில்லாமல் திண்டாட வேண்டியது தான்........'

'என்னப்பா—நீ கூடப் பொய் சொல்றே.......ஒரு சாமிதான் இருக்குண்ணு எல்லாருக்கும் சோறு போடாதாப்பா? எனக்குச் சோறுதான் சாப்பிட ஆசையாயிருக்கு. பெரிய வீட்டிலே மட்டும் சோறு; நம்ம வீட்டிலே கஞ்சி........அப்படிண்ணு எப்படி ஒரு சாமிதான் இருக்கும்?'

இராமனுக்கு என்ன வகையாகக் குழந்தைக்குப் பதில் சொல்வதென்று தெரியவில்லை. உலக நடப்புகளெல்லாம் குழந்தைக்குத் தெரியுமா? உழைத்து வந்த அவனுக்கு வேலையனுடைய அறிவைக் கண்டு மகிழ முடிந்ததே தவிர விடை கூறிச் சமாதானப் படுத்துவதென்பது முடியாத காரியமாகி விட்டது. ஆனாலும் என்னென்னவோ சொல்லிப் பார்த்தான். ஒன்றும் முடியாமல் கடைசியாக வேலை

யனைப் பார்த்து சரிடா, கண்ணு, உனக்கு இப்ப என்ன வேணுங்கிறே....? ' அப்பாவுக்குத் தூக்கம் வந்திருச்சு....'

'என்னப்பா, நீ எப்படியானுப்பா, நாளைக்கு வர போது சோறு போடுற சாமியை வாங்கிக்கிட்டு வா... கஞ்சி ஊத்துற சாமி நமக்கு வேண்டவே வேண்டாம்........'

நாளைக்குப் படும்பாடு அப்புற மிருக்கட்டு மென்று இராமன் 'சரி' என்று சொல்லி வைத்தான். வேலையன் இரவெல்லாம் சோற்றுச் சாமி கனவையே கண்டு கொண் டிருந்தான். கூரை வீட்டின் நடுவில் கம்பி வழியாகத் தொங் குகிற மின்சார விளக்குகள் எத்தனையோ அவன் கனவுகளில் வந்தன. அவைதான் அவனுக்குச் சோறு போடுகிற சாமிகள் !

---

## படைதிரண்டு வாரீர்!

'குயிலன்'

அண்ட முட்டிக் கிடுகிடுக்கத் தமிழர் கொட்டும் முரசொலி
அகிலவுலகம் யாவுமெட்ட அதிர்ந்ததிர்ந்து கேட்குது
பண்டுதொட்டு ஊறிவந்த வீரமெங்கு போனது?
படை திரண்டு அரசுபற்றத் தமிழர் கூடி வருகுவீர்!

தமிழகத்தில் முதல்குவித்துத் தொழில்பிடித்து ஒரு சிலர்
தங்கள் லாபக் கருவியாக்கிச் சுரண்டும் செய்கை வீழ்ந்திட
அமிழ்தமிக்க தமிழகத்து ஆண், பெண் சிங்கம் வருகுவீர்
ஆர்ப்பரித்து, தோளுயர்த்தி வேகமாகச் செல்லுவோம்

சாதிசமய பேதமற்ற தமிழகத்தை ஆக்குவோம்
சமதர்மத்தை நிலைநிறுத்தி ஏழ்மையாவும் போக்குவோம்
வீதிதோறும் வீடுதோறும் கலைமணக்கச் செய்குவோம்
வீரமோடு உயிர்வெறுத்து தீரர்கூடி வருகுவீர்

வீடு சுற்றம் மனைவி மக்கள் வாழ எண்ணம் கொள்வரேல்
மேன்மைமிக்க தமிழகத்தில் வாழவைக்க எண்ணுவீர்
நாடு வீழ்ச்சி யுற்றபின்பு நமது வீடும் சுற்றமும்
நலிவிலாது வாழ்தலேது? நாட்டைக் காக்க வருகுவீர்

மேலைநாட்டிற் கடிமை நீங்கிக் கிழக்கு நாட்டிற் கடிமையாய்
வெள்ளை போகக் கறுப்புவந்து விலங்கு மாட்ட வேண்டுமோ?
வேலை வெல்லும் விழியர் பெற்ற வீரமிக்க தமிழர்காள்!
வேறுயாரும் தமிழகத்தை ஆளவிட்டுப் பார்ப்பதோ?

———

## விட்டுப் பஞ்சம்

' பாமரன்

சென்னையில் இன்று நண்பர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்க நேர்ந்தால், முதலில் கேட்கும் கேள்வி, "ஐயா, எங்காவது வீடு கிடைக்குமா?" என்பதேயாகும். ஆம், இன்று சென்னையில் உணவுப் பஞ்சம், உடைப் பஞ்சத்தை விட வீட்டுப் பஞ்சமே பெரிதாக இருக்கின்றது. அமைச்சர்களும், அதிகாரிகளும் கூட இந்த வீட்டுப் பஞ்சத்திற்கு விலக்கல்ல.

வாணிபத்திற்காக சென்னை வந்துள்ள வெளியூர்ப் பணக்காரர்கள் பங்களாவைத் தேடி அலைகின்றனர். படித்து விட்டுப் பதவி பெற்ற பட்டதாரிகளும், மாடி வீடு தேடி அலைகின்றனர். எங்கு சென்றாலும் 'இல்லை' என்ற பதில் தான்.

பணக்காரர்களுக்கு—பட்டதாரிகளுக்கு வீட்டுப் பஞ்சம் என்ற உடனே, பத்திரிகைகள் பரிவு காட்டுகின்றன. பேச்சாளிகள் மேடையேறி, "இது கொடுமை! கொடுமை!!" எனக் கூக்குரலிடுகின்றனர். அதிகார வர்க்கமும், இந்தக் 'கொடுமை'யைக் குறைக்க ஆலோசனை செய்து வருகின்றதாம்.

இதையெல்லாம் பார்த்துப் பாமரன் சிரிக்கிறான். பட்டினியால் குடல் சுருங்கினாலும், கொழுப்பு சுருங்காமல் சிரிக்கிறான். ஏன்?

வீடில்லாத எந்த பெரிய மனிதரும் வீதியில் உறங்கக் கண்டதில்லை. 'காஸ்மா பாலிடன் கிளப்' அவர்களைக் கைகூப்பி வரவேற்கின்றது. 'எவரெஸ்டு ஓட்டல்' அவர்களை எதிர்கொண்டு அழைக்கின்றது. அங்கு மின்சார விசிறி அவர்கள் மேனி குளிர வீசுகின்றது. 'ஏய்' என்ற குரலுக்கு, 'எசமான்' என்ற பதிலுடன் பணி செய்ய ஏவலாளன் காத்திருக்கின்றான். இந்த நிலையில் தான் அவர்கள் வீட்டுப் பஞ்சமெல்லாம். இதற்குத் தான் இவ்வளவு ஆரவாரம்!

பாமரனுக்கும் வீட்டுப் பஞ்சம் உண்டு. பாடு பட்டும் பலனறியாத பாட்டாளி மக்கள் நகரத் தெருக்களில் வானத்தைக் கூரையாகவும், மானத்தைச் சுவராகவும் வைத்து வாழ்கின்றனர்—வாழாமல் வாழ்கின்றனர்; சாக மனமின்றி, சாக்கடையோரத்தில் வாழ்கின்றனர். உண்பதும் அங்கே! உறங்குவதும் அங்கே! மங்கல விழா வாகட்டும், மரணச் சடங்காகட்டும், எல்லாம் அந்தச் சாக்கடை யோரத்தில் தான்.

அடிக்கும் காற்றாலும், பெய்யும் மழையாலும், நடுக்கும் குளிராலும், தகிக்கும் வெயிலாலும் அவர்கள் படும் கொடுமை, சொல்லி முடியாது. இன்றல்ல, நேற்றல்ல; எத்தனையோ தலை முறையாக இந்தக் கோர வாழ்வு. முன்னே வாழ்ந்து முடிந்த அப்பனுக்கும் இந்த வாழ்வு தான். இன்றுள்ள மகனுக்கும் இந்த வாழ்வுதான். இனி வரும் பேரனுக்கும்...............?

வீடில்லாத் தொல்லையால் பாமரன் படும் வேதனை இது.

TAMIL NADU ARCHIVES LIBRARY No. 102044



அதிகார வர்க்கமும் இவர்களது அவல நிலையை அறிந்ததுண்டு. பணமிருந்தும் மனமில்லாப் பணக்காரர்களும் இவர்களது கதியைக் கண்டதுண்டு. பகுத்தறிவிருந்தும் சிந்தனை செய்யா படிப்பாளிகளும் இவர்களது பரிதாப நிலையைப் பார்த்ததுண்டு. கவிஞர்களின் காவியங்களிலும், எழுத்தாளர்களின் கதைகளிலும்கூட இவர்கள் காட்சியளித்ததுண்டு. என்றாலும், அந்தப் பாமர மக்களின் வீடில்லாத் தொல்லைக்கு விமோசனமில்லை.

பணக்காரர்களுக்கும், படிப்பாளிகளுக்கும் கையில் பணமுமுண்டு. கேட்ட குடிக்கூலியைக் கொடுக்க மனமுமுண்டு. என்றாலும் இப்போது வீடில்லை. பாமரனுக்கோ கையிலே காசில்லை. ஆகவே, குடிக்கூலிக் கொடுக்க மனமிருந்தும் மார்க்கமில்லை. அதனால் அவனுக்கு எப்போதுமே வீடில்லை.

அறிவாளிகளே! நாகரிகம் வாய்ந்த நகரத்தின் நடுவில் பாமரன் நடத்தும் நரக வாழ்க்கை உங்கள் பகுத்தறிவைப் பழிக்கவில்லையா?

அதிகார வர்க்கமே! இருக்க இடமில்லாத ஏழை மக்களின் இன்னல் உன் இறையாட்சியைச் சபிக்கவில்லையா?

இனியேனும், பணக்காரர்களுக்குப் பங்களாவும், படித்தவர்களுக்கு மாடி வீடும் தேடித் தருவதுடன் நில்லாது, பாதையோரத்தில் வாழும் பாமரனுக்கும் கூரை வீடேனும் கட்டித்தர முன் வருவாயா?

---

Printed at the Adal Padal Press, 82, Wallajah Road, Mount Road, Madras.—Q. H. M. S. 491—7-1946.

# கப்பலோட்டிய தமிழன்

(வ. உ. சி. வாழ்க்கை வரலாறு)

ஆக்கியோன் :

ம. பொ. சிவஞான கிராமணி

(பத்திப்பாசிரியர் : தமிழ் முரசு)

அழகிய இரண்டாம் பதிப்பு

முதற்பதிப்பைவிட விறிவானமுறையில் எழுதப்பட்டு

விறைவில் வெளிவரும்.

விவரங்களுக்கு :

தமிழ்ப் பண்ணை,

தியாகராய நகர், :: மயிலாப்பூர்,

சென்னை.

323
2-122

# வீரக் கண்ணகி

ஆக்கியோன் ம. பொ. சிவஞான கிராமணி

★★★

சிலப்பதிகாரத்தை அரசியல்
நோக்குடன் ஆராய்ந்து
எழுதப்பட்ட ஓர் அரியநூல்

●

கண்ணகியின் புரட்சி, பாண்டியன்
நெடுஞ் செழியன் செங்கோண்மை,
பழந்தமிழ் மக்களின் அரசியல் நெறி
ஆகியவைகள் விரிவாக ஆராயப்
பட்டுள்ளன

●

விரைவில் வெளிவரும்!

★★★

## தமிழ் முரசு பதிப்பகம்,

233, லிங்கி செட்டி தெரு.

சென்னை, 1.

Vani Printing Wo[illegible] T., Madras.